# OUR LADY OF GOOD HEALTH PARISH
# தூய ஆரோக்கிய அன்னைப் பங்கு

**131 Birchmount Road, Scarborough, ON M1N 3J7**
416-264-OLGH (6544) : **Phone**
416-264-6545 : **Fax**
office@olghtamilparish.com : **Email**
www.olghtamilparish.com : **Website**


**07/18/2021**



என் அன்பான தூய ஆரோக்கிய அன்னை பங்கு மக்களே,

உங்கள் அனைவரையும் செபத்தோடு கூடிய வாழ்த்துக்களும் ஆசிகளும் கூறி, இந்த அன்பு மடல் மூலம் தொடர்பு கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கோவிட்-19 நோய் பரவல் மற்றும் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை குறைந்து வரும் நிலையில், ஒன்ராரியோ அரசு ஏற்கனவே அறிவித்த திட்டத்தின்படி, கடந்த வெள்ளிக்கிழமை, யூலை 16ம் திகதி, ஒன்ராரியோ மாகாணம், மூன்றாவது நிலைக்கு நகர்த்தப்பட்டுள்ளதை நீங்கள் அறிவீர்கள்.

ஒன்ராரியோ அரசின் இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, எமது ரொறன்ரோ அதியுயர் மறைமாவட்டம் வழங்கிய அறிவிப்பின் பிரகாரம், பின்வரும் விடயங்கள் எமது கத்தோலிக்க ஆலயங்களில் கடைப்பிடிக்கப்பட வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது.

- மூன்றாவது நிலைக்கு நகர்த்தப்பட்டுள்ளதால், திருப்பலி வழிபாடுகளில் பங்கேற்கும் இறைமக்கள் எண்ணிக்கையில் எதுவித கட்டுப்பாடுகளும் இனி இருக்காது. எனினும், சமூக இடைவெளியாக ஏற்கனவே அமுலில் உள்ள 6 அடி அல்லது 2 மீற்றர் இடைவெளி, தொடர்ந்தும் இறுக்கமாக ஆலயத்தினுள் கடைப்பிடிப்பது அவசியமாகிறது. இதன்படி, ஒரே முகவரியில் இல்லாதவர்களுக்கு இடையில் இந்த சமூக இடைவெளி கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டும். ஆலயத்தில் மண்டபங்கள் இருந்தால், மண்டபங்களில் மேலதிக மக்களை அனுமதித்து, அங்கே நேரடி ஒளிபரப்பை வழங்கலாம்.

- திருமணம், திருமுழுக்கு, இறந்தவர்களுக்கான இறுதி வழிபாடு மற்றும் விசேட திருப்பலிகளுக்கு பங்கேற்கும் இறைமக்கள் எண்ணிக்கையிலும் எதுவித கட்டுப்பாடுகளும் இருக்காது. இருப்பினும், சமூக இடைவெளி ஆலயத்தினுள் தொடர்ந்தும் பேணப்படுவது அவசியம்.

- ஆலய மண்டபங்களில் ஒன்றுகூடல் மற்றும் கூட்டங்களுக்கு புரட்டாதி 3 இலிருந்து அனுமதிக்கப்பட்டாலும், மண்டபத்தின் 50 வீதமான எண்ணிக்கையே ஆகக்கூடிய தொகையாகக் கணிக்கப்படவேண்டும். பங்குபற்றுபவர்களின் விபரங்கள் பதியப்படுவதுடன் மண்டபங்களில் உணவு பரிமாறுவது தொடர்ந்தும் தவிர்க்கப்படுவது நல்லது.

- ரொறன்ரோ நகரசபை உபசட்டவிதிகளுக்கு அமைவாக, முகக்கவசம் அணிவது தொடர்ந்தும் கட்டாய சட்டமாக அமுலில் உள்ளது. முழுமையாக இரு தடுப்பூசிகளையும் எடுத்தவர்களும், நகரசபை சட்டங்களுக்கு அமைவாக முகக்கவசம் அணிவது அவசியம்.

- முழுமையான பாடகர் குழாமாக இணைந்து பங்குபற்றுவது தொடர்ந்தும் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரு பாடகர் அல்லது 3 மீற்றர் இடைவெளியை ஒவ்வொருவருக்கும் இடையில் பேணும் வகையில் ஒரு சில பாடகர்கள், பாடல்களைப் பாடலாம். எமது தூய ஆரோக்கிய அன்னைப் பங்கைப் பொறுத்தவரை, ஆகக்கூடியது 3 அல்லது 4 பாடகர்கள், போதிய இடைவெளியைப் பேணி, பாடல்களைப் பாடுவது நல்லது.

- திருப்பலி மற்றும் வழிபாடுகளின் நேரடி ஒளிபரப்புகள் நடைபெற்றுவரும் ஆலயங்களில் தொடர்ந்தும் இந்த ஒளிபரப்புக்கள் நடைபெறவேண்டும். மூத்தோர், முதியோர் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தோர் உட்பட, ஏனைய உடல்நலம் குறித்த சிரமங்கள் உள்ளோர், மக்கள் ஒன்றுகூடும் இடங்களுக்கு வருவதைக் குறைப்பது நல்லது.

- கோவிட் தொற்றின் அறிகுறிகள் அல்லது இது தொடர்பான நோய்த் தாக்கங்கள் உள்ளவர்களும், உடற்பலவீனமுள்ளவர்களும், முன்னெச்சரிக்கையை கருத்தில் கொண்டு, நேரடியாக ஆலயத்திற்கு வருவதை தற்காலிகமாக தவிர்த்துக்கொள்வது நல்லது.

- தொடரும் நாட்களில், தற்போதுள்ள மீதியான கட்டுப்பாடுகளையும் தளர்த்த முடியுமென நாம் நம்புகிறோம். கோவிட்-19 தாக்கத்தை எதிர்கொள்வோர் தொகை நாளுக்கு நாள் குறைந்து வருவதுடன், தடுப்பூசிகளை எடுத்துக்கொள்வோர் தொகை அதிகரித்து வருகிறது. நாங்கள் சரியான திசையில் பயணிப்பதை உணர்கிறோம். உங்களது தொடர்ச்சியான புரிதலுக்கும் பொறுமைக்கும் விட்டுக்கொடுப்பிற்கும் நாம் நன்றி கூறுவதுடன், நாம் ஒருவருக்கு ஒருவர் பாதுகாப்பாக இருப்பதே தொடர்ந்தும் ஆரோக்கியமான நடைமுறையாக இருக்குமென நம்புகிறோம்.

நேரலை ஒளிபரப்பிற்கு தொடர்ந்து உதவ விரும்புவோர், எமது அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம். உங்களது பெயர் விபரங்கள் திருப்பலியின் ஆரம்பத்திலும் முடிவிலும் அறிவிக்கப்படும்.

அவசர தொடர்புகளுக்கு, கிழமை நாட்களில் காலை 9:00 மணியிலிருந்து மதியம் 12:00 மணிவரை, எமது அலுவலக தொலைபேசியில் அழைத்து பேசலாம் (416-264-6544).

இறை இயேசுவின் ஆசியும் வாழ்த்துக்களும் கூறி நிற்கும்,
உங்கள் பணியாளன்,

**அருட்பணி சாள்ஸ் கொலின்ஸ்**
**பங்குத்தந்தை, தூய ஆரோக்கிய அன்னை தமிழ்ப் பங்கு**

தொலைபேசி: 416-264-6544
மின்னஞ்சல்: office@olghtamilparish.com
இணையத்தளம்: www.olghtamilparish.com
முகநூல்: https://www.facebook.com/OLGHTamilParish
வலைஒளி: https://www.youtube.com/olghtamilparish